RNI No: TNTAM/2023/88599

# திரை மொழி

THIRAI MOZHI TAMIL MONTHLY

தமிழ் மாத இதழ்

| திரை : 02 | மொழி : 10 | மே - 2025 | பக்கம்: 8 | விலை: ரூ.10 |
|---|---|---|---|---|
| Volume : 02 | Issue : 10 | May - 2025 | Page: 8 | Price: Rs. 10 |

FEFSI MAY DAY 2025

# இந்திய திரைப்பட வரலாற்றில் முதன்முறையாக திரைப்படத் தொழிலாளர்களுக்கு PF & ESI




**தொழிலாளர்கள் அமைப்பு என்பது தனித்தனியாக செயல்படுவது தான் உலக வழக்கம்.**

ஆனால், ஃபெப்ஸி எனும் தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம் என்பது 25,000 தொழிலாளர்கள் குடும்ப உணர்வுடன், ஒற்றுமையாக இணைந்து செயல்படும் ஓர் உயர்ந்த அமைப்பாகும்.

உழைக்கும் கரங்கள் ஒன்று சேர்வது இயல்பு. ஆனால் உழைக்கும் தொழிலாளர்களின் மனங்கள் ஒன்று சேர்ந்திருக்கும் அதிசயம்தான் ஃபெப்ஸி.

அதற்கு காரணகர்த்தா ஃபெப்ஸியின் இதயமாகச் செயல்படும் தலைவர் கேப்டன் திரு.ஆர்.கே. செல்வமணி அவர்கள். அத்தனை தொழிலாளர்களின் இதயத்திலும் தலைவராக மட்டும் அல்ல நண்பராக, சகோதரராக, தொழிலாளர்களின் குடும்பத்தில் ஒருவராக தன்னுடைய அன்பால், செயல்பாட்டால் தனி இடம் பிடித்திருக்கிறார் .

திரைத்துறை சார்ந்த 23 தொழில் பிரிவுகளின் சங்கங்கள் இணைந்த ஒரு மாபெரும் சம்மேளனம்தான் ஃபெப்ஸி. எல்லோரும் எளிதில் தலைவரை சந்தித்து தங்களது பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்த்து செல்லும் விதமாக தலைவரின் அணுகுமுறை உள்ளது. சினிமா உலகம் நன்றாக இருக்க வேண்டும் எனும் விதமாகவே தலைவரின் செயல்பாடு இருந்துவருகிறது. தலைவரின் வல்லமை பொருந்திய இருகரங்களாக செயல்படும் பொதுச் செயலாளர் B.N.சுவாமிநாதன் மற்றும் பொருளாளர் S.P.செந்தில்குமார் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

> **பெப்சி தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஏதாவது கருத்து வேறுபாடு வரும் பொழுது, அதை நடிகர்கள் கவனித்து இருதரப்பினரிடமும் பேசி சுமூகமாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். அது அவர்களது தார்மீகக் கடமை.**

ஃபெப்ஸி, உழைப்பாளர்கள் தினத்தை ஒவ்வொரு வருடமும் சிறப்பாக கொண்டாடி வருகிறது.

ஆனால், இந்த 2025ஆம் வருட மேதினம், ஒட்டு மொத்த சினிமா சங்கங்கள் அசந்து வியக்கும் அளவுக்கு,



வெகு விமரிசையாக கொண்டாடப் பட்டது. காமராஜர் அரங்கம் உள்ளே பெப்ஸி தொழிலாளர்கள் நிறைந்த அதே அளவு கூட்டம் வெளியே நின்றிருந்தது. இது தொழிலாளர்களின் உணர்வுகளை, ஒற்றுமையை உலகுக்கு எடுத்துக்காட்டும் விதமாக சிறப்பாக நடந்தது.

> பக்கம் 4ல் தொடரும்

டிஸ்கவரி புக் பேலஸ்

1055-B, முனுசாமி சாலை, கே.கே. நகர்,

சென்னை-78 | 9940446650

திரையிடல், நூல் வெளியீட்டுக்கான

70 பேர் அமரக்கூடிய சிற்றரங்கம்



டிஸ்கவரி புக் பேலஸ்



டிஸ்கவரி ஆர்ட் கேலரி



பிரபஞ்சன் அரங்கம்




ஜெயகாந்தன் குடில்

டிஸ்கவரி புட் கார்னர்

# தமிழ் சினிமாவின் முன்னோடிகள்

ஆத்தியாயம்-7

V.V.பிரசாத்
(டீ சினிமா ரிசோர்ஸ் செண்டரின் ஆவனக்காப்பாளர்)




*(டீ சினிமா ரிசோர்ஸ் செண்டர் (TCRC) ஒரு லாப நோக்கற்ற சினிமா ஆவண காப்பகம் ஆகும். இது இந்திய சினிமாவின், முக்கியமாக தென்னிந்தியாவின் பிராந்திய மொழிகளின் ஒலிஒளி சம்பந்தமான கலைப்பொருட்களின் ஆராய்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள சென்னை மாநகரத்தை அடிப்படையாக கொண்டு இயங்குகிறது. மேலும் தகவல் அறிய <https://tcrcindia.com/> இணையதளத்தின் மூலம் தொடர்பு கொள்ளவும்.)*

## T.R. சுந்தரம்

திருச்செங்கோடு ராமலிங்க சுந்தரம் தென் இந்திய திரைத்துறையின் மிக பிரதானமான முன்னோடிகளில் ஒருவர். அவர் ஜூலை 16, 1907ம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் உள்ள திருச்செங்கோட்டில் நூல் வியாபாரம் செய்யும் குடும்பத்தில் பிறந்தார். சேலத்தில் பள்ளி படிப்பை முடித்தவுடன் சென்னைக்கு B.A. படிக்க சென்றார். குடும்பத்தார் தங்கள் தொழிலை நவீனபடுத்த சுந்தரத்தை வெளிநாடு சென்று நெசவு தொழில் நுட்பம் படிக்க ஊக்குவித்தனர். ஆகையால் நெசவு தொழில்நுட்பத்தில் அறிவியல் பட்டம் படிக்க இங்கலாந்தில் உள்ள லீட்ஸ் பல்கலைக்கழகம் சென்றார். அங்கு கிலாடிஸ் என்ற ஆங்கிலேய பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டார். தன் ஆங்கிலேய மனைவியுடன் இந்தியா வந்த பொழுது குடும்பத்தாரோ சொந்தக்காரர்களோ இந்த புதிய உறவை ஏற்று கொள்ளவில்லை. அவர்கள் குடும்பத்தின் நெசவு தொழிலிலும் சேர்த்து கொள்ளவில்லை. சுந்தரம் இதை பற்றியெல்லாம் கவலைப்படாமல் திரையுலகத்தில் நுழைந்து பெரும் வெற்றி அடைந்து தமிழத்திரை வரலாற்று புத்தகத்தில் தனது பெயரை அழுத்தமாக பதிவு செய்தார்.

தன்னுடைய திரைவாழ்க்கையை சேலத்தை சேர்ந்த எஞ்சேல் பிலிம்ஸ் உடனான கூட்டணியுடன் துவங்கினார். படங்கள் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட ஆரம்பித்தார். அவற்றில் திரௌபதி வஸ்திரபுரானம் 1934ம் ஆண்டு வெளிவந்தது. சிறிது காலம் எஞ்சேல் பிலிம்ஸுடன் இருந்த கூட்டணி மூலம் பெற்ற அனுபவங்களை கொண்டு தனியாக தயாரிப்பு நிறுவனம் துவங்கினார். இப்படி தான் துவங்கியது வரலாற்று சிறப்புமிக்க மாடர்ன் தியேட்டர்ஸ். ஏற்காடு மலை அடிவாரத்தில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டபட்ட இந்த ஸ்டுடியோ பல




ஜாம்பவான்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தது. சென்னை மாநகரத்தை விடுத்து கட்டபட்ட மிக பெரிய தென் இந்திய ஸ்டுடியோக்களில் ஒன்றாக இது விளங்கியது. மாடர்ன் தியேட்டரில் கிட்டதட்ட 250 பணியாளர்கள் வேலை செய்ததாக நம்பப்படுகிறது. S.V. ரங்காராவ், அஞ்சலி தேவி மற்றும் M.R.ராதா போன்ற பிரபலமான கலைஞர்கள் சுந்தரம் மூலமாக இங்கு தான் அறிமுகப்படுத்தப்பட்டார்கள்.

சுந்தரம் மாடர்ன் தியேட்டரில் தயாரித்த முதல் படம் 1937ல் வெளிவந்த சதி அகல்யா. முதல் முறையாக மாடர்ன் தியேட்டர் ஸ்டுடியோவில் முழுவதுமாக எடுக்கப்பட்ட இப்படத்தை அவரே இயக்கினார். இலங்கையை சேர்ந்த நடிகை K.தவமணி தேவி முன்னணி கதா பாத்திரத்தில் நடித்தார். இலங்கையில் பிறந்திருந்தாலும் தனது கலை வாழ்க்கையை தொடர சென்னைக்கு குடியேறினார். கர்நாடக இசை மற்றும் பரதநாட்டியத்தில் தேர்ந்த பயிற்சி பெற்ற காரணத்தால் அவரால் பாடி நடிக்க முடிந்தது. மிக பிரபலம் அடைந்த தவமணி சிங்களத்து குயில் என்று அழைக்கப்பட்டார். சுந்தரம் படத்தயாரிப்பை துவங்கும் பொழுது பத்திரிக்கையாளர்களை அழைத்தார். அப்பொழுது நீச்சல் உடையில் இருக்கும் தவமணி தேவி புகைப்படம் வெளியிட்டார். இது அக்காலக்கட்டத்தில் மிக கவர்ச்சியான படம் என்பதால் சர்ச்சைக்கு உள்ளானது. தேவி, தான் கவர்ச்சியாக நடிப்பதில் ஒரு பரிமாணத்தை ஏற்படுத்தினார். பின்னாளில் இதை பின்பற்றிய நடிகைகள் தான் T.R. ராஜகுமாரி மற்றும் மாதுரி தேவி போன்றோர் என கூறலாம்.


அதே வருடம் சுந்தரம் பத்ம ஜோதி படத்தை தயாரித்து இயக்கியும் இருந்தார். மாடர்ன் தியேட்டர்ஸின் இரண்டாவது படமான இதில், தமிழ் சினிமா மட்டும் அல்ல, இந்தியா விலேயே முதல் முறையாக ஒரு புது அம்சத்தை அறிமுக படுத்தினார்கள்.

படத்தின் தலைப்பு காட்சியில் அனிமேஷன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இருந்தார்கள். கதாநாயகி பத்மா பெயர் வரும் பொழுது பல பாவங்களுடன் அவர் முகம் கார்ட்டூனில் காட்டப்பட்டது. அனிமேஷன் பற்றி அதிகம் தெரியாத காலத்தில் இதை செய்தது வியக்கத்தக்க விஷயம் ஆகும். படத்தில் 25 பாடல்கள் இருப்பதாக திரைப்பட ஆய்வாளர் ராண்டர் கைய் (Randor Guy) தனது புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார். படம் வியாபாரரீதியாக மிக பெரிய வெற்றி பெறாவிட்டாலும் முதல் முறையாக அனிமேஷன், தேசபக்தி தழுவிய கதை மற்றும் சிறந்த இசைக்காக நினைவுக்கொள்ள படுகிறது.

1930-1940 காலக்கட்டத்தில் T.R. சுந்தரம் இயக்கிய அல்லது தயாரித்த மற்றும் சில படங்கள்:

- 1938: தாயுமானவர்
- 1938: மாயா மாயவன்
- 1938: மயூராத்வஜன்
- 1939: மாணிக்கவாசகர்
- 1939: சந்தன தேவன்
- 1940: விக்ரம ஊர்வசி
- 1940: சதி மகானந்தா
- 1940: சத்யவாணி
- 1940: உத்தமபுத்திரன்
- 1940: ஹரிஹர மாயா
- 1940: சதி முரளி

T.R. சுந்தரம் இயக்கிய மாணிக்கவாசகர் 1939ல் வெளிவந்தது. இப்படத்தை சேலத்தை சேர்ந்த இரண்டு நிறுவனங்களான ஸ்ரீ கிருஷ்ணா பிலிம்ஸ் மற்றும் மாடர்ன்




*A still from the Movie MANICKAVASAGAR featuring M.M.Dhandapani Desigar and others*

*PC: From the archives of TCRC*




*A still from the Movie MANICKAVASAGAR*
*PC: From the archives of TCRC*

தியேட்டர்தயாரித்தன. மாணிக்கவாசகர் நடிகராக M.M. தண்டபாணி தேசிகருக்கு இது மூன்றாவது படம் மட்டுமல்லாமல் சுந்தரமுடன் தாயுமானவர்க்கு பிறகு இரண்டாவது படம் ஆகும். M.S. தேவசேனா மறுபடியும் தாயுமானவர் தொடர்ந்து சுந்தரம்தேசிகர் கூட்டணி யில் கதாநாயகியாக நடித்தார். பின்னாளில் தேவசேனா மற்றும் தேசிகர் நிஜத்திலும் வாழ்க்கை துணைவர்களாக ஆனார்கள்.

மாணிக்கவாசகர் திரைப்படம் மாணிக்கவாசகர் என்ற துறவியின் வாழ்க்கை வரலாறு ஆகும். தேசிகர் பாடுவதை கேட்பதற்கு அவருக் கென்று ஒரு ரசிகர் கூட்டம் இருந்தது. பின்னாளில் அவர் கர்நாடக இசையில் ஒரு ஜாம்பவானாக திகழ்ந்தார். கர்நாடக இசையில் தமிழ் பாடல்கள் அதிகரித்ததில் அவருக்கு முக்கிய பங்கு உண்டு. திருக்குறளை கொண்டு அவர் நடத்திய முழு கச்சேரிகள் இந்தியா மட்டுமல்லாமல் உலகெங்கிலும் உள்ள இசை வல்லுனர்களால் இன்றும் போற்ற படுகிறது. கர்நாடக இசை பற்றி அதிகம் தெரியாத பாமர மக்கள் கூட அவரது இசையை ரசித்தார்கள். இசை அரசு என்று அவர் அழைக்கப்படுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. தமிழிசை சங்கத்தின் இசை பேரறிஞர் என்ற பட்டம் மற்றும் சங்கீத நாடக அகாடமி விருது என பல அங்கீகாரங்களை அவர் பெற்றார்.

T.R. சுந்தரம் தயாரிப்பில் S.நொட்டானி இயக்கத்தில் வந்த சந்தனதேவன் ராபின்ஹூட் கதையை தழுவி எடுக்கப்பட்ட படம். நொட்டானி தான் இயக்கி வெளி வந்த மலையாளத்தின் முதல் பேசும்படமான பாலன் உட்பட மாடர்ன் தியேட்டர்ஸ் உடன் சிறிது காலம் பணிபுரிந்தார். அதில் சந்தனதேவன் மூலமாக முதல் முறையாக தமிழ் படத்தில் இஸ்லாமிய மதத்தை சேர்ந்த கதாநாயகன் வேடத்தில் G.M. பஷீர் நடித்தார். பிரிட்டிஷ் அரசின் வரி அமைப்புகளை மறைமுகமாக தாக்கி பாடல் களும் வசனங்களும் எழுதப்பட்டன. அரசின் தணிக்கை குழுவிற்கு பயந்து மக்களை இரக்க மின்றி வரிகளை போடும் மதனன் என்ற கதாபாத்திரத்தை அமைத்திருந்தார்கள். கதாநாயகன் சந்தனதேவன் மக்களுடன் சேர்ந்து பாட்டு பாடி மற்றும் பணக்காரர்கள், அரசு அதிகாரிகள் என அவர்களிடம் பணத்தை பறித்து ஏழை எளிய மக்களுக்கு கொடுத்து உதவினான். M.R. ராதா முதல் முறையாக வில்லன் கதாபாத்திரத்தில் நடித்தார். இப்படம் அவருக்கு (ராஜசேகரன் பிறகு) இரண்டாவது படம் ஆகும்.

T.R. சுந்தரம் ஆரம்பித்த புகழ்பெற்ற மாடர்ன் தியேட்டர்ஸ் ஒரு கட்டத்தில் வருடத்திற்கு மூன்று படங்கள் தயாரித்தது. 98 படங்கள் முடித்தவுடன் 99வது படத்திற்கு திட்டமிட்டு கொண்டிருந்தார். 100வது படத்திற்கு பிறகு நூற்றாண்டு விழா நடத்தவும் ஆவலாக இருந்தார். ஆனால், விதி வசம் சுந்தரம் 56 வயதில் 1963ம் ஆண்டு உயிரிழந்தார். அப்பொழுது 98 படங்கள் வரை தயாரித்திருந்தது மாடர்ன் தியேட்டர்ஸ். அதில் 56 படங்களை சுந்தரமே இயக்கி யிருந்தார். அதற்கு பிறகு மாடர்ன் தியேட்டர்ஸின் பாரம்பரியத்தை அவரது மகன் ராம சுந்தரம் தொடர்ந்தார். ஸ்டுடியோ கலாச்சாரம் அழிவதற்கு முன்பு அங்கு 117 படங்கள் தயாரிக்கப்பட்டன.

சுந்தரம் ஸ்டுடியோவை நேர்த்தியாக ஒழுக்கத்துடன் நடத்திய விதத்திற்காக தமிழ்த்திரைப்பட ஆர்வாளர்களிடயே நினைவுக்கூறப் படுகிறார். ஒரு தொழிற்சாலையை போல் விதிகள் கடைப்பிடிக்கப் பட்டன. முன்னணி நடிகராக இருந்தாலும் தாமதமாக வந்தால் நுழைவுவாயில் மூடப்பட்டு பல மணிநேரங்கள் வெளியே நிர்க்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளபட்டார் கள். ஸ்டுடியோவின் நுழைவுவாயில் கள் குறித்த நேரத்துக்கு மூடப்பட்டன. பார்வையாளர்கள் யாரும் அனுமதிக் கப்படமாட்டார்கள். இவ்வளவு கடினமாக இருப்பினும் அவருடைய சிறப்பு அம்சம், எல்லோருக்கும் கணிசமான ஊதியம் குறித்த நேரத்தில் கொடுக்கப்பட்டது. இது அக்காலக் கட்டத்தில் அபூர்வமானது.

சுந்தரம் தனது திரைப்பயணத்தில் பல மைல்கற்களை எட்டினார்.



அவற்றில் சில;

1. தமிழில் முதல் முழுநீள வண்ணத்திரைப்படத்தின் தயாரிப்பாளர்.

2. முதல் பேசும் படமான பாலன் படத்தின் இயக்குநர்.

3. முதல் மலையாளம் வண்ணப்படம், கண்டம் பேச்சா கொட்டு படத்தின் இயக்குநர்.

4. இந்தியாவிலேயே முதல் முறையாக பத்திரிக்கையில் வாக் கெடுப்பு நடத்தி தனது மனோன்மணி படத்துக்கு நடிகர், நடிகைகளை தேர்ந்தெடுத்தார்.

5. உத்தம புத்திரன் படம் மூலம் சூப்பர் ஸ்டார் P.U. சின்னப்பா போன்று பல படங்களில் பல ஜாம்பவான்களை உருவாக்கினார்.

6. சுந்தரம் அவர்களின் திரைப்பட துறைக்கான பங்களிப்பை குறிப்பிடாத இந்திய சினிமா வரலாறு புத்தகம் அரிது.

7. தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர்., கலைஞர் கருணாநிதி, வி.என்.ஜானகி ஆகியோரும், கவியரசு கண்ணதாசன் போன்ற ஜாம்பவான்களையும் உருவாக்கியது சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ்.

தொடரும்...





*A still from the Movie SANDHANADEVAN Featuring G.M.Basheer and P.Bhanumathi*
*PC: From the archives of TCRC*

திரை மொழி

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
கௌரவ ஆசிரியர்கள் : குரு ரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : ஸ்ரீராம் பத்மநாபன், V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்
நிருபர் : தங்கமித்ரன்

தொடர்புக்கு :
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

# ரஜினி - தனுஷ் வயதை ஏற்றி இறக்கும் ஏ.ஐ.




Madam I Am your only Adam என்று கமல் த்ரிஷாவின் பின்கழுத்தில் முத்தம் தருகிறார். வயசான பின் இப்படியெல்லாம் நடிக்கலாமா என கண்டன கும்மிகள் வைரலாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால், நான் வயதான தக்லைஃப் கமலை, வயதைக் குறைத்து நாயகன் கமலாக காட்டிய அந்தக் காட்சியை இரசித்துக் கொண்டிருக்கிறேன். De-aging என்பது இந்த தொழில் நுணுக்கத்தின் பெயர். ஜெயிலர் ரஜனி வயது குறைக்கவும், அசுரன் தனுஷ் வயது அதிகரிக்கவும் இதே தொழில்நுணுக்கம்தான் பயன்பட்டது. இக்காட்சிகளில் ஃபோட்டோஷாப் முதல் ஏ.ஐ. வரை பல நுணுக்கங்களின் கலவைகள் பயன்பட்டன. தக் லைஃப் படத்தில் மிகச் சிறப்பாக வயதைக் குறைக்க பயன்பட்டிருக்கிறது.

media.io
galaxy.ai
agewithai.io
ailab.wondershare.com
vondy.com

இவை வயதை ஏற்றி இறக்கும் பிரபலமான செயற்கை நுண்ணறிவுகள். இந்த வரிசையில் டிஸ்னியின் FRAN AI மிக நுட்பமானது. நியூரல் நெட்வொர்க்குகளை பயன்படுத்து வதால் தரமும் அதிகம், செலவும் அதிகம்.

**வியோ எனப்படும் வீடியோ ஏ.ஐ**

வியோ வந்தாச்சு. வீடியோ என்பதின் செல்லச் சுருக்கம் தான் VEO. இது நானே அவதானித்தது. SORA விற்குப் போட்டியாக கூகுள் இறக்கி விட்டிருக்கும் செயற்கை நுண்ணறிவு. இன்னமும் இந்தியாவுக்குள் வரவில்லை. ஆனால் ஆர்வம் தாங்காமல் VPN பயன்படுத்தி இந்திய இன்டர்நெட் சுவர்களைத் தாண்டி, பலரும் வியோ பயன்படுத்தி வீடியோ உருவாக்கிவருகிறார்கள். ஸோராவிற்கு நிஜமான போட்டி.

**இரண்டு லட்சத்தில் ஏ.ஐ. படமா?**

ஏ.ஐ.யின் அருகாமை கோடம்பாக்க கற்பனைகளை பாதிக்கத் துவங்கிவிட்டது. இரண்டு லட்சம் போதும், ஏ.ஐ. சினிமா எடுத்துத் தருகிறேன் என யாரோ கிளப்பி விட்டிருக்கிறார்கள். அந்த யாரோவிடம் தங்கள் வங்கி இருப்பை இழக்கத் தயாராகிவிட்ட சிலர், எனது வொர்க் ஷாப்களில் திடுதிப்பென்று பிரசன்ன மாகி கேள்வி கேட்கிறார்கள்.

இம்மாதம் மனுஷ்யபுத்திரன் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் கோடை முகாமில் கலந்து கொண்டேன். கிட்டத்தட்ட 40 பேச்சாளர்கள். அதில் ட்ராஸ்கி மருது, ஷான் கருப்பசாமி மற்றும் எனக்கும் ஒரு நாள் ஒதுக்கியிருந்தார்கள். காலையில் அவர்கள் பேசிச்சென்றதும், இறுதி இரண்டு மணிநேரத்தில் என்னை பேசச்சொன்னார்கள். டீ அருந்திவிட்டு, புறப்படும் மனநிலையில் இருந்தோரை தக்கவைக்க, பேச்சைக் குறைத்து, நிறைய செயற்கை நுண்ணறிவுகளை பயன்படுத்திக்காட்டினேன். இருபதில் இருந்து அறுபது வயது வரை அனைத்து வயதிலும் பங்கேற்பாளர்கள் சோம்பல் கலைந்து சுறுசுறுப்பானார்கள்.



அந்த பயிற்சிப் பட்டறை மாணவர்களுக்கானது. அதனால் அவர்கள் படிக்கவும், பயிற்சி செய்யவும், ஞாபகம் வைத்துக் கொள்ளவும் பலவித செயற்கை நுண்ணறிவு செயலிகளை அறிமுகம் செய்து, சில உதாரணங்களை செய்து காட்டினேன். பட்டறை முடிந்ததும், ஒரு மாணவன் தனது பரிட்சை அட்டையில் கையெழுத்து பெற்றுக் கொண்டான். ஒரு எழுத்தாளர் புத்தகம் பரிசளித்தார். மற்றொரு மாணவி, மிக்க நன்றி சார். நான் பி.ஹெச்.டி செய்கிறேன். படிப்பதற்கு தடுமாறிக் கொண்டிருந்தேன். ஆனால் நீங்கள் அறிமுகம் செய்த Notebook LM எனக்கு நம்பிக்கை தந்துவிட்டது என்றார்.

Notebook LM என்பது ஆராய்ச்சியாளர்களுக்கான ஏ.ஐ. இதில் கட்டுரைகளை பதிவேற்றிவிட்டு கேள்வி கேட்டால் அந்தக் கட்டுரைகளை நமக்காக வாசித்து அதிலிருந்து பதில் தரும். அதாவது Notebook LM அனுபவம் வாய்ந்த பேராசிரியராக மாறி நமக்கு பயிற்சி தரும். பாடங்களில் உள்ள அனைத்து சந்தேகங்களையும் தீர்த்து வைக்கும்.

இதனை திரைக்கதாசிரியர்கள் எப்படி பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை, வகுப்பு முடிந்ததும் என்னை அணுகிய திரைத்துறையினருக்கு சொல்லித்தந்தேன். Notebook LMல் உங்கள் ஸ்க்ரிப்ட்டை அப்லோடு செய்துவிட்டு, கதை, திரைக்கதை, கதாபாத்திரங்கள், இடைவேளை, கிளைமாக்ஸ் பற்றி விதவிதமாக கேள்வி கேட்கலாம். அது சளைக்காமல் பதில் தரும். அது சொல்லும் ஆலோசனைகளின் படி ஸ்க்ரிப்டுகளை திருத்திக்கொள்ளலாம்.

நான் புரிந்து கொண்டிருப்பது என்னவென்றால், பத்து வார்த்தைகள் கூட எழுதாதவர்களும், பக்கம் பக்கமாக எழுதிக் குவிப்பவர்களும் ஒரே கோட்டுக்கு வந்துவிட்டார்கள். உதவிக்கு ஆள் எதற்கு ஏ.ஐ. இருக்கு என்பது அவர்களின் நம்பிக்கை. பால்யம் முதல் தேக்கி வைத்திருக்கும் கற்பனைகளுக்கு, திரைவடிவம் கிடைத்துவிடும் என்கிற நம்பிக்கையை ஏ.ஐ. அவர்களுக்கு தந்திருக்கிறது.

இரண்டு லட்சத்தில் ஒரு படம் செய்துவிட முடியுமா? விரும்பியதைக் கேட்காமல், ஏ.ஐ. கொடுப்பதை பெற்றுக்கொள்ளும் மனநிலைக்கு வந்தால் துண்டு துண்டாக பல வீடியோக்களை உருவாக்கலாம். ஆனால், அவை திரைப்படத்திற்கு உரிய அம்சங்களுடன் கிடைப்பது கடினம். ஃபோன் திரையில் (அதில்



உள்ள குறைகளை மன்னித்துவிட்டு) (பார்த்துக்கொள்ளலாம். பெரிய திரைக்கு மாற்றுவது (தற்போது) சாத்தியமில்லை.

**ஒரே கிளிக்கில் ஒரு திரைப்படம்**

Skyreels AI கடந்த இரு மாதங்களாக நம்பர் ஒன் இடத்தில் இருக்கிறது. ஒரு பிராம்ப்ட் கொடுத்தால் முழுப்படமும் கையில் வந்துவிடும். அதிலேயே Video Generator, Video Editor, Lip Sync வசதிகள் உள்ளன. நாவலை திரைக்கதையாக்கும் Novel to Script மற்றும் Script to Shorts பட்டன்கள் உள்ளன. ஆடியோவிலும் குறைவில்லை. Text to Music, Text to Speech, Sound Effects உட்பட சகலமும் ஒரே செயலில் உள்ளன. புதிதாக ஏ.ஐ திரைஉலகில் நுழைபவர்கள் இதனை முயற்சிக்கலாம்.

அதே பெயரில் ஒரு விலையில்லா (Open Source) செயற்கை நுண்ணறிவும் இருக்கிறது. அதன் இணைய முகவரியை தந்திருக்கிறேன். பயன்படுத்துங்கள். ஒரு குறும் படமாவது உடனே உருவாக்குங்கள். https://skyreelsai.online/

**ISR செல்வகுமார்** ஏ.ஐ நிபுணர்,
திரைப்பட இயக்குநர்



# தமிழ் திரை உலகின் முதல் நகைச்சுவை வில்லன்



“இவர் எனது ஆரம்பகால மாணவர். நான் ஆசிரியராக இருந்த நாடக சபையில் வந்து சேர்ந்தார். நல்ல சாரீர வளமும் முக வசீகரமும் கண்டு உடனே சபாவில் சேர்த்தோம். வந்த அன்றே சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய சீமந்தினி நாடகத்தில் பல்லவராஜன் என்ற ஒரு சிறிய பாடமுள்ள ஒரு வேடம் கொடுத்து நடிக்க செய்தேன். கொஞ்சமும் கூச்சமின்றி நடித்து ரசிகர்கள் உள்ளத்தை கவர்ந்தார். வாய் பேசுவது போல அவரது உடலின் ஒவ்வொரு அவயமும் பேசும் இயற்கை சக்தியை பெற்றவர். பாலையா எனது மாணவர், நான் பாக்கியம் செய்தவன்” என்று திரு டி.எஸ்.பாலையா அவர்களை பற்றி அவரது நாடக ஆசிரியரான எதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை தன் அன்பிற்குரிய மாணாக்கர்களில் ஒருவராக பாலையாவை குறிப்பிட்டு அவருக்கு புகழாரம் சூட்டினார்.

“திரையில் ஒரு காட்சியில், பிரேமில் அந்த நடிகர் நடித்தால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் கொஞ்சம் அசந்தாலும் நம்மை பின்னிக்கு தள்ளி விடுவார்” என்று சிவாஜி சொல்லி இருக்கிற நடிகர்கள் மூவர். ஒருவர் எஸ்.வி.ரங்காராவ் மற்றொருவர் எம்.ஆர்.ராதா இன்னொருவர் டி.எஸ்.பாலையா. ஆம் அந்த அளவிற்கு பாலையாவின் நடிப்பு ஆளுமை தமிழ் சினிமாவை கட்டி ஆண்டது. குணச்சித்திரம், நகைச்சுவை, நயவஞ்சகம், பாமரத் தனம், மேதாவித்தனம், ஏழ்மை, பணக்காரத்தனம் போன்ற எந்தக் கதாபாத்திரமானாலும் தன்னுடைய இயல்பான அலட்டலில்லாத நடிப்பின் மூலம் ஏராளமான ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் திக்கு முக்காடச் செய்தவர் டி.எஸ்.பாலையா. திருநெல் வேலி சுப்பிரமணியன் பாலையா என்பதன் சுருக்கமே டி.எஸ்.பாலையா ஆனது. இன்றைய தூத்துக்குடி மாவட்டம் (பழைய திருநெல்வேலி மாவட்டம்) சுண்டாங்கோட்டையில் 1914 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 23ஆம் தேதி ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்த பாலையா சற்று குறைவான உயரம் கொண்டிருந்தார். இதனால் பள்ளியில் சக மாணவர்கள் அவரை கேலிக்கு உள்ளாக்குவார்கள், மேலும் படிப்பிலும் பெரிய நாட்டம் இல்லாமல் இருந்ததால் எப்படியாவது அனைவரும் புகழும் வண்ணம் வாழ்க்கையில் சாதித்துக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு சிறுவயதிலேயே தனக்குள் ஒரு லட்சியத்தை கொண்டு இருந்தார். இந்நிலையில் பாலையா ஆறாம் வகுப்பு படிக்கும்போது அவரது ஊருக்கு வந்திருந்த ஒரு சர்க்கஸிற்கு சென்றார். அந்த சர்க்கஸில் நடக்கும் சாகசங்களை கண்டு இது ஏதோ கனவுலகம் என்பது போல் மனதில் நிறுத்திக்கொண்டார். சர்க்கஸ் கலைஞர்களின் சாகசங்களை கண்ட மக்கள்கரகோஷங்களைஎழுப்பியதைக் கண்ட பாலையா தாமும் இதுபோல இந்த சர்க்கஸில் சேர்ந்தால் பலர் பாராட்டுகளை பெற முடியும் என்று எண்ணி, சர்க்கஸ் முதலாளியை தொடர்பு கொண்டு, தன்னையும் வேலையில் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டினார். ஆனால், சர்க்கஸ் முதலாளி அந்த வேண்டுகோளை நிராகரித்து விட்டார். இதனால் மனதில் வெறிகொண்டு எப்படியாவது தானும் ஒரு சர்க்கஸில் வேலைக்கு சேர வேண்டும் என்ற எண்ணத்தில் தனது நண்பன் ஒருவனிடம் இந்த செய்தியை கூற, அவரது நண்பன் மதுரையில் தனக்கு தெரிந்த சர்க்கஸ் நிறுவனம் ஒன்று இருப்பதாகவும் அங்கு பாலையாவை வேலைக்கு சேர்த்து விடுவதாகவும் சொல்லி அதற்கு ஒரு தொகையையும் தயார் செய்ய சொல்லி கூற, பாலையா தினமும் தனது



தந்தையின் சட்டை பையில் இருந்து களவாடி சிறுக சிறுக சேமித்து ஒரு குறிப்பிட்ட தொகையை எடுத்துக் கொண்டு மதுரைக்கு கிளம்ப எண்ணியபோது, அவரது நண்பர் “நான் சொன்ன நபர் மதுரையில் இல்லை மானாமதுரையில் இருக்கிறார்” என்று கூறி, இருவரும் மானாமதுரைக்கு பயணப்பட்டனர். நள்ளிரவானதால், புது ஊரில் தங்குவதற்கு வழி இன்றி, ரயில்வே பிளாட்பாரத்திலேயே இருவரும் தங்கினர். காலையில் விழித்த பாலையாவிற்கு அதிர்ச்சி தான் மிஞ்சியது. அவரது நண்பனை காண வில்லை, அவருடைய பணப்பையை யும் காணவில்லை. தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்ற கசப்பான உண்மை அப்போதுதான் பாலையாவிற்கு தெரிந்தது. மனம் நொந்த பாலையா கையில் காசு இல்லாமல், சொந்த ஊருக்கும் செல்ல வழி இல்லாமல் விழித்துக்கொண்டிருந்தார். அப்போது, அங்கு இருந்த ஒரு உணவு விடுதிக்கு சென்று வேலை கேட்க, அது ஒரு பெண்மணி நடத்தும் உணவு விடுதி, பாலையா விற்கு மலையாளம் நன்கு தெரியும், இதனை பயன்படுத்தி தான் ஒரு மலையாளி என்றும், பிழைக்க இந்த ஊருக்கு வந்ததாகவும் கூறி அந்த உணவு விடுதியில் வேலைக்கு சேர்ந்தார். இப்படியே சில நாட்கள் செல்ல ஹோட்டலுக்கு அருகில் இருந்த ஒரு கசாப்பு கடை பாய் நாடக கம்பெனி தொடங்குவதாக கேள்விப் பட்டு அவருடன் நெருங்கி பழக ஆரம்பிக்கிறார். ஆனால், அதுவும் கைகூடாத நிலையில் தனது ஹோட்டல் முதலாளியிடம் தான் மலையாளி அல்ல திருநெல்வேலியை சேர்ந்தவன் என்ற உண்மையைக் கூறி ஊருக்கு செல்ல பணம் வாங்கிக்கொண்டு சொந்த ஊருக்கே திரும்பினார்.

இந்நிலையில் திருநெல்வேலி யில் நாகலிங்கம் என்பவர் பாலமோகன சங்கீத சபா என்ற புதிய நாடக கம்பெனி உருவாக்கினார். பல சிரமங்களுக்கு பிறகு இந்த நாடக கம்பெனியில் 1929 ஆம் ஆண்டு தனது 15 வது வயதில் நாடக வாழ்க்கையை துவங்கினார் பாலையா. ஆறு மாதத்திற்கு உணவு உறைவிடம் தவிர சம்பளம் என்று எதுவும் கிடையாது. அதன் பின் பாலையாவிற்கு மாதம் ஆறு ரூபாய் சம்பளம் தரப்பட்டது. இவ்வாறாக தனது கலை பயணத்தை ஆரம்பித்த பாலையா அவர்களுக்கு தூக்குத்தூக்கி மற்றும் பதிபக்தி நாடகம் மிகப் பெரும் வரவேற்பை கொடுத்தது. இந்த பதிபக்தி நாடகம் A.N.மருதாச்சலம் செட்டியார் என்பவரால் எஸ்.எஸ். வாசனின் நாவலை தழுவி சதிலீலாவதி என்ற பெயரில் திரைப்படமாக எடுக்க முடிவு செய்யப்பட்டது. பதிபக்தி நாடகத்தில் மிகவும் சிறப்பாக வில்லன் வேடத்தில் நடித்த பாலையா அவர்களுக்கு சதிலீலாவதி படத்திலும் வில்லன் வேடம் கிடைத்தது. 1936 ல் தனது திரை பயணத்தை வில்லன் கதாபாத்திரத்தோடு தொடங்கினார் பாலையா. இந்த திரைப்படத்திற்காக அவருக்கு கொடுக்கப்பட்ட தொகை 350 ரூபாய். இந்த சதிலீலாவதி திரைப்படம் பாலையா மட்டுமல்ல எம்.கே.ராதா, என்.எஸ்.கிருஷ்ணன், எம்.ஜி.ராமச்சந்திரன், கே.எ.தங்கவேலு மற்றும் திரைப்படத்தின் இயக்குநர் எல்லீஸ் ஆர்.டங்கன் (அமெரிக்கர்) என அனைவருக்கும் முதல் படமாக அமைந்தது. கோட்டுசூட்டு போட்ட நாகரிக வில்லனாக இந்த திரைப்படத் தில் தோன்றி மக்களின் மனங்களை கவர்ந்தார் பாலையா. மேலும் இந்த படத்தில் மூன்று பாடல்களை பாலையா தன் சொந்த குரலில் பாடினார். அந்த காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் பாலையாவின் நடிப்பை வெகுவாக பாராட்டின. இதே வருடம் இரு சகோதரர்கள் என்ற திரைப்படத்தி லும் வில்லனாக நடித்தார். இந்த படத்தையும் எல்லீஸ் ஆர்.டங்கன் இயக்கினார். அடுத்ததாக எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களுடன் அம்பிகாபதி திரைப்படத்தில் வில்லனாக நடித்தார். குறிப்பாக பாகவதரும் பாலையாவும் மேற்கொள் ளும் வாட்போர் மிகுந்த வரவேற்பை பெற்றது.

தொடரும்...

திரை மொழி
TALKIES
Thiraimozhi Talkies





*மலேசியாவில் நடைபெற்ற Edison Tamil film Awards நிகழ்ச்சியில் 2024ஆம் ஆண்டின் சிறந்த புதுமுக நடிகராக ரசிகர்களின் ஆன் லைன் வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது பெற்ற நடிகர் " இளம் புயல் " திரு.விஜய் கனிஷ்கா அவர்களுக்கு வாழ்த்துகள். இவர் இயக்குநர் திரு.விக்ரமன் அவர்களுடைய மகன் என்பது பெருமைக்குரியது. இவர் திரைத்துறையில் இன்னும் பல சாதனைகளை புரிய திரைமொழி வாழ்த்துகிறது.*



## “கதை ” இயக்குநரின் குழந்தை!

இயக்குநர்கள், எழுத்தாளர்களிடம் நடிகர்கள் கதை கேட்டது பொற்காலம்; தற்போது ஹீரோக்களின் மேலாளர்கள், உதவியாளர்கள் தான் கதை கேட்கிறார்கள்; இனி ஹீரோக்கள் கதையை மெயிலில் அனுப்புங்கள் என கேட்காதீர்கள்; அது குழந்தையை மெயிலில் அனுப்புவது மாதிரி; கதை என்பது | இயக்குநரின் குழந்தை

- ஜின் பட விழாவில் ஃபெப்சி தலைவர் ஆர்.கே.செல்வமணி பேச்சு




Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**